தலைப்பு 306 இலங்கை புகையிரதத் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 306 – இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 யூன் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை இலங்கை புகையிரதத்

திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன்

காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமானப் பெறுவனவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டின் போது 06 வகையான வருமானங்கள் தொடர்பாக அட்டவணைகளின் படி ரூபா 16,176,746,231 தொகை காணப்பட்டதுடன், வருமானம், வருமானக் கூற்றின் படி அது ரூபா 17,461,383,818 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் அந்த மீதிகளிடையே ரூபா 1,284,637,587 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	புகையிரத் திணைக்களத்தின் வருமான வகைப்படுத்தலில் முரண்கள் காணப்படுகின்றதென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டவாறு பெறுமதியிடையே வித்தியாசம் காணப்படுகின்றது என்ற அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன்.	நிதிக்கூற்றுக்களில் வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், அதற்குரிய அட்டவணைகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.
(ii)	வருமானம் வகைப்படுத்தும் போது ஒரே வருமானம் ஒவ்வொரு மாதங்களிலும் ஒன்றிற்கு ஒன்று வித்தியாசமான வருமான வகையில் காட்டப்பட்டிருந்தமையால் வருமான	புகையிரத் திணைக்களத்தின் வருமான வகைப்படுத்தலில் முரண்கள் காணப்படுகின்றதென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.	வருமானங்களை சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்ய வேண்டும்.

வகைப்படுத்தல் நிச்சயிக்கப்பட்ட அடிப்படையொன்றின் படி மேற்கொண்டிருக்கவில்லை.	கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டவாறு பெறுமதியிடையே வித்தியாசம் காணப்படுகின்றது என்ற அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன்.	

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முறப்பணக் கணக்கு மீதான இணக்கக்கூற்று

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆரம்பத்தில் திணைக்கள ஏடுகளின் படி கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 1,243,797,537 தொகையாக காணப்பட்டதுடன், அது திறைச்சேரி அச்சுப் பதிவின் படி ரூபா 1,247,975,342 தொகையாக காணப்பட்டது. இதன்படி, திணைக்கள ஏடுகள் மற்றும் திறைச்சேரி ஏடுகள் இடையே ரூபா 4,177,805 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. திணைக்களம் அதிகாரசபையொன்றாக மாற்றப்பட்ட காரணத்தினால் அமைச்சினால் இந்தக் கணக்குகள் தயாரிக்கும் போது 2004 ஆண்டு முதல் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்த போதிலும், தற்போது 20 வருடங்கள் மிகைத்திருந்த போதிலும், இந்த வித்தியாசத்தை தீர்த்துக்கொள்வதற்கு முடியாதிருந்தது.	இந்த கடன் மீதியை தீர்த்துக்கொள்வதற்கு அறிவுரை வழங்குமாறு அரச கணக்குத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) ஆதனங்கள், பொறிததொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 488,731,492,579 தொகையாக காணப்பட்ட போதிலும், அதனை மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியென ரூபா 484,263,351,241 தொகையென பதிவு செய்திருந்தமையால் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 4,468,141,338 தொகை குறைவாக	பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.	நிதியல்லாத சொத்துக்களின் மீதிகள் கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும்.

	காட்டப்பட்டிருந்தது. அதேபோல் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் காணிகள், இயந்திர உபகரணங்கள், கட்டிடங்கள் மற்றும் நடைமுறை வேலை பெறுமதி என 2023 மற்றும் 2024 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குமுரிய ரூபா 10,468,147,616 தொகை மீளாய்வாண்டின் கணக்குகளுடன் சீராக்கல் செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்குரிய பெறுமதிகளை தனியாக இனங்காண முடியாமல் இருந்தது.		
(ii)	மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 494,731,498,857 தொகையாக காணப்பட்டதுடன், திறைசேரி அச்சுப் பதிவின் படி அந்த மீதி ரூபா 906,824,395,574 தொகையாக காணப்பட்டமையால் அந்த மீதிகள் இடையே ரூபா 412,092,896,717 தொகைக்கான வித்தியாசத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	மீளாய்வாண்டின் போது புகையிரத திணைக்களத்தின் பாதைகள் மற்றும் வேலைகள் உப திணைக்களத்திற்கு பயன்படுத்துவதற்காக செயற்திட்டம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,231,523,455 இற்கான இயந்திர உபகரணங்கள் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(iv)	மீளாய்வாண்டின் போது பிரதான இயந்திரப் பொறியியலாளர் உப திணைக்களத்தின் 2024 மே 20 திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி இயந்திர உபகரணங்களின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 283,500,135,821 தொகையாக காணப்பட்ட போதிலும், அது நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 74,096,703,287 தொகையென கணக்கீடு செய்திருந்தமையால் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 209,403,432,534 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஈ) களஞ்சிய முற்பணக் கணக்கு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு களஞ்சிய முற்பணக் கணக்கின் திறைசேரி அச்சுப் பதிவின் படி திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதி ரூபா 9,201,870,163 தொகையாக காணப்பட்டதுடன், களஞ்சிய முற்பணக் கணக்கில் முன்னைய ஆண்டுகளின் மிகை மதிப்பீடு செய்தல் ரூபா 403,366,221 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தமையால், களஞ்சிய முற்பணக் கணக்கு மீதி திறைசேரி அச்சுப் பதிவின் படி மீதிக்கு சமர்ப்படுத்தப்பட்டிருந்தது. இந்தச் சீராக்கல் 2014 ஆண்டு முதல் முன்னைய ஆண்டுகளின் மிகை மதிப்பீடு என முற்பணக் கணக்கிற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் சீராக்கல் செய்யப்பட்ட மீதி 2019 ஆண்டு முதல் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.	2013 ஆண்டு முதல் இனங்கண்டிருந்த பெறுமதி ரூபா 492,132,509 இற்கான நிலுவைத் தொகை தற்போது ரூபா 403,366,221 வரை குறைக்கப்பட்டிருந்தது. மேலும், தொடர்ந்து பரிசோதனை செய்யப்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அறிவிக்கின்றேன்.	மிகை மதிப்பீடு என கணக்குகளில் காணப்பட்டுள்ள மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் போது செலவுத் தலைப்புகளின் மூலம் செலுத்தப்பட வேண்டிய ரூபா 142,676,688 இற்கான செலவுகள் களஞ்சிய முற்பணக் கணக்கின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டதை சரி செய்யும் போது அந்த மீதி களஞ்சிய முற்பணக் கணக்கில் முன்னைய ஆண்டுகளுக்காக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் பெறுவனவுகள் என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் களஞ்சிய முற்பணக் கணக்கில் ஆண்டின் போது செலவு வைத்தல் அந்த பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	மீளாய்வாண்டின் குறைந்த பெறுவனவு வரையறை ரூபா 1,900 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும், ரூபா 2,290 மில்லியன் தொகை வரை பெறுவனவுகள் கணக்கீடு செய்திருந்தமையால், இந்த செலவு வைத்தலினால் மீளாய்வாண்டின் குறைந்த பெறுவனவு வரையறை வினைப்படுத்தியிருக்கவில்லை.	முன்னைய ஆண்டுகளுக்கான உரிய தவறுகள் முன்னைய ஆண்டின் இறுதி மீதியுடன் சீராக்கல் செய்ய வேண்டும்.
(iii)	2009 ஆண்டு முதல் எதுவித வழங்கலும் மேற்கொள்ளப்படாமல் மற்றும் பௌதீக மீதியொன்று காணப்படாமல் ரூபா 61,836,980 இற்கான எரிபொருள் மற்றும்	மிகவும் பழமையான மீதிகளாக காணப்பட்டமையால் அந்தத் தகவல்களை இனங்கண்ட பின்னர் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு	இருப்பு குறைவிற்கான காரணத்தை இனங்கண்டு இருப்பின் பெறுமதியை சரி செய்ய வேண்டும்.

	உராய்வு எண்ணெய் இருப்பொன்று மீளாய்வாண்டின் இறுதி இருப்பில் உட்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த இருப்பு குறைவிற்கான காரணத்தை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும். மூலவளத்தை கண்டறிய முடியாமை மற்றும் போதியளவு பதவியணியினர் காணப்படாத காரணத்தினால் மேற்கூறிய மீதிகளை இனங்காண்பதற்கு மற்றும் சரியாக சமர்ப்பிப்பதற்கு கணிசமான காலமொன்று தேவைப்படுகின்றது.	
(iv)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாமல் நாணயப் பத்திரங்களின் பெறுமதி ரூபா 305,723,618 தொகையாக காணப்பட்டதுடன், அது 02 வருடங்களுக்கும் 26 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 92,370,325 இற்கான மீதியொன்றும் காணப்பட்டது.	இணங்குகின்றேன்.	நாணயப் பத்திரங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(v)	1980 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை ரூபா 95,035,685 தொகை வழங்குனர்களுக்கு செலுத்தியிருந்த போதிலும், அந்த கொடுப்பனவு தொடர்பான பண்டங்கள் கிடைக்காமை, சேதமடைந்த இருப்புக்கள், பொருத்தமற்ற இருப்புக்கள் கிடைக்கப்பெறல் மற்றும் புறக்கணிக்கப்பட வேண்டிய இருப்புக்கள் ஆக இந்த மொத்தப் பெறுமதி அடங்கியிருந்தமையால் இந்த இருப்பு வழியில் இருப்பு மற்றும் முற்கொடுப்பனவு என களஞ்சிய முற்பணக் கணக்கில் காட்டப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.	இந்தக் காலப் பகுதி தொடர்பாக ரூபா 95,035,685 தொகையொன்று பண்டங்கள் கிடைக்கப் பெறாமை, இருப்புகள் சேதமடைதல், பொருத்தமற்ற இருப்புக்கள் கிடைக்கப் பெறல், புறக்கணிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருப்புக்களுக்காக வழங்குனர்களுக்கு செலுத்தியிருந்ததுடன், அதற்காக எதிர் காலத்தில் அந்த பண்டப் பெறுவனவுப் பத்திரம் விரைவாக பெற்றுக்கொண்டு அந்தத் தொகையை இருப்புடன் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் தெரிவிக்கின்றேன்.	பண்டப் பெறுவனவுப் பத்திரங்களை பரிசோதனை செய்யப்பட்டு அதன்படி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(vi)	1980 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை 44 ஆண்டுகள் காலப் பகுதியினுள் ரூபா 20,667,636 தொகை முற்பணம் என வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி வரை அதற்கான பண்டங்கள் கிடைக்கப் பெறாமையால் அந்தப் பெறுமதி தீர்க்கப்படாத முற்பணங்கள் வழியில்	இந்த முற்பணத்தின் பெறுமதியாகிய ரூபா 20,667,636 தொகை எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன்.	தீர்க்கப்படாத முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இருப்பு மற்றும் முற்கொடுப்பனவு என களஞ்சிய முற்பணக் கணக்கில் காட்டப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		

(உ) கட்டுநிதி மீதி

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருக்காத ரூபா 4,641,160 இற்கான கட்டுநிதி மீதி 2025 ஏப்ரல் மாத கணக்கு பொழிப்பின் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது.	ரூபா 4,641,160 தொகை தீர்க்கப்படாத முற்பணம் 2024 ஆண்டின் தேர்தல் கொடுப்பனவு செலுத்துவதற்கு உரியதாக காணப்படுவதுடன், 2025 ஏப்ரல் மாத கணக்குப் பொழிப்பின் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது.	திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 494,731,498,857 தொகைக்கான நிதியல்லாத சொத்துக்களில் ஒவ்வொரு சொத்துத் தொகுதியிலும் வெளியிடப்பட்டிருந்த பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு அதில் அடங்கியுள்ள மீதிகளின் அறிக்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்காமையால், அந்த பெறுமதியை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	சொத்துக்களுக்குரிய விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள ரூபா 9,075,356,468 தொகை பெறுமதியான இறுதி இருப்புக்காக களஞ்சியத்தின் படி இருப்பின் எண்ணிக்கை அலகு ஒன்றின் பெறுமதி, மொத்தப் பெறுமதியை காட்டக்கூடிய இருப்பு அறிக்கைகள் மற்றும் இருப்பு கணிப்பீட்டு அறிக்கைகள் 2019 முதல் 2021 வரையான காலப் பகுதிக்குரிய ரூபா 8,025,663 இற்கான தீர்க்கப்பட்டிருக்காத நாணயப் பத்திரங்களுக்காக அட்டவணைகள் 1980 ஆண்டு	பதிலளிக்கப்படவில்லை.	ஒவ்வொரு மீதிகளுக்குமான விரிவான அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும்.

	முதல் 2019 ஆண்டு வரை ரூபா 33,681,583 தொகைக்குரிய பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், கிடைக்கப் பெற்றிருக்காத பண்டங்களுக்கான அட்டவணை 1996 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை காலம் தொடர்பாக ரூபா 76,452,203 இற்கான கடன் கொடுத்தோரின் அட்டவணை சமர்ப்பித்திருக்காமையால் அந்த மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு மற்றும் மெய்மையாய்வதற்கு முடியாமல் இருந்தது.		
(iii)	மீளாய்வாண்டின் திறைசேரி அச்சுப் பதவின் படி ரூபா 407,396,141,500 தொகை பெறுமதியான காணிகள் அகற்றப்பட்டதென கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், அதனை உறுதிப்படுத்தும் சான்றுகள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	பதலளிக்கப்படவில்லை.	அகற்றுவதற்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு	**செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள்**	**இந்த அறிக்கையில் பந்தியுடன் தொடர்பு**
(i)	1.6.6(அ)(i)	பிரமாணங்களின் பிரகாரம் திறைசேரி கணினி அச்சுப் பதிவுகள் மற்றும் திணைக்கள ஏடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், வித்தியாசங்களை பரிசோதனை செய்து சரி செய்தல் வேண்டும்.	1.6.1 (ஈ)(i)

(ii)	1.6.6(ஆ)(i)	வித்தியாசத்திற்கான காரணங்களை பரிசோதனை செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1(ஆ)(i)
(iii)	1.6.8	நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டும்.	1.6.1 (உ)(ii)

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு தொடர்பாக எண்ணெய் போக்குவரத்துக்கான இன்வொயிஸ்களின் படி ரூபா 132,853,404 தொகைக்கான வருமானம் வாடிக்கையாளருடன் இணக்கப்பாடொன்று இன்றி ரூபா 16,171,289 தொகை கழித்த பின்னர் வருடத்திற்கான அந்த வருமானம் ரூபா 116,682,115 தொகை என வருமானக் கூற்றிற்கு எடுக்கப்பட்டிருந்தது.	குறிப்பிட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.	இணக்கப்பாட்டின் படி வாடிக்காளர்களுடன் செயற்பட வேண்டும்.
(ஆ)	திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு கொடுப்பதற்காக பில்பத்திரங்கள் வழங்கப்பட்ட கோப்பின் படி மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 1,476,237,740 தெகைக்கான நிலுவை காணிக் குத்தகை வருமானம், நிலுவை வருமானம் பற்றிய கூற்றில் கணக்கீடு செய்திருக்கவில்லை.	2024 ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நிலுவை வருமானம் கணிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அந்தத் தொகை நிலுவை வருமானத்துடன் உட்படுத்தப்படவில்லை.	நிலுவை வருமானம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	1987 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படுகின்ற புகையிரத அனுமதிப்பத்திர கணக்கு 1 இல் ரூபா 769,194 தொகையும், 1987 ஆண்டு முதல் காணப்படுகின்ற புகையிரத அனுமதிப்பத்திரக் கணக்கு 2 இல் ரூபா 704,779,313 தொகையுமாக	திணைக்களத்தின் ஆரம்பம் முதல் 1987 வரை அனுமதிப்பத்திர கணக்கு 1 செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 769,194 இற்கான நிலுவை மீதிக்காக போதியளவு ஆவணங்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. அனுமதிப்பத்திர கணக்கு 2	நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு அல்லது விதிகளின் பிரகாரம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ரூபா 705,548,507 இற்கான மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இற்குரிய நிலுவை வருமான மீதிகளை அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களை அறிவுறுத்தப்பட்டுள்ளது.	
(ஈ)	பண்ட வருமானத்தில் 2024 ஆண்டு தொடர்பாக ரூபா 98,449,334 தொகையும், 2023 ஆண்டு தொடர்பாக ரூபா 10,540,806 தொகையும், 2022 ஆண்டு தொடர்பாக ரூபா 4,945,223 தொகையும் மற்றும் 2021 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் காணப்படுகின்ற ரூபா 43,004,153 தொகையுமாக ரூபா 156,939,516 தொகை மீளாய்வாண்டு இறுதித் திகதியிலுள்ளவாறு நிலுவை வருமானம் ஒன்று காணப்பட்ட போதிலும், அதனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த நிலுவைகள் 60 வருடங்களை மிகையான காலம் முதல் காணப்படுகின்ற பெறுமதிகளாக காணப்படுகின்றமையால் உரிய தகவல்களை கண்டறிய முடியாமல் உள்ளதென கருணையுடன் அறிவிக்கின்றேன்.	நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு அல்லது விதிகளின் பிரகாரம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	ஏனைய வருமானத்தில் 2024 ஆண்டு தொடர்பாக ரூபா 21,219,599 தொகையும், 2023 ஆண்டு தொடர்பாக ரூபா 42,893,257 தொகையும், 2022 ஆண்டு தொடர்பாக ரூபா 16,569,366 தொகையும் மற்றும் 2021 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 482,811,247 தொகையுமாக ரூபா 563,493,469 தொகை மீளாய்வாண்டு இறுதித் திகதியிலுள்ளவாறு நிலுவை வருமானம் என காணப்பட்ட போதிலும், அவற்றை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதிலளித்திருக்கவில்லை.	நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செலவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மிகை மதிப்பீடு தயாரித்தல்		
(i) மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் 04 செலவு விடயங்களுக்காக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 26,150,000 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும், 29 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 438,050,000 இற்கான ஏற்பாடுகளில், ரூபா 198,067,933 தொகையும் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது மதிப்பீட்டு ஏற்பாடுகளில் 21 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	திணைக்களத்தில் உள்ளக நிதிக்கட்டுப்பாட்டை பேணிச் செல்லும் வசதிக்காக துணை செலவு விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த இவ்வாறான பரவலான திணைக்களத்தின் கருமங்களின் தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக தேவையான செய்முறையில் சில சமப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டும்.
(ii) மீளாய்வாண்டிற்காக 06 மூலதனச் செலவு விடயங்களுக்காக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 14,907,000,000 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் 09 மூலதன விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5,810,700,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 2,278,114,589 தொகையும் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளில் 21 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	இவ்வாறான பரவலான திணைக்களத்தின் கருமங்களின் தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக தேவையான செய்முறையில் சில சமப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட நேரிடுகின்றது. மதிப்பீடு தயாரிக்கும் போது நூறு சதவீதம் சரியாக மேற்கொள்ள முடியாது. துணைச் செலவு விடயங்கள் மிகைத்தல் ஏற்பட்ட போதிலும், திறைச்சேரியின் செலவு விடயங்களுக்கான ஏற்பாடுகள் வரையறையினுள் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன்.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அரச மரக் கூட்டுத்தாபனத்தின் படி புகையிரதத் திணைக்களத்திலிருந்து அந்த கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 1,105,956,992 தொகை காணப்பட்ட போதிலும், புகையிரத திணைக்களத்தின் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 1,268,369 தொகையென காட்டப்பட்டிருந்தமையால் அந்த மீதிகளிடையே ரூபா 1,104,688,623 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்ட போதிலும், அதனை இனங் காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர் காலத்தில் பொறுப்புக்களின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென அறிவிக்கின்றேன்.	குறிப்பிட்ட நிறுவனத்துடன் மீதியை சரியாக இனங்கண்டு பொறுப்புக்கள் கூற்றில் வெளியிடப்பட வேண்டும்.

3.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படுகின்றவாறு குறிப்பிட்ட காலப் பகுதியில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளித்தல் மேற்கொள்ளப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 4.4 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கியிருக்கவில்லை.	ஆரம்ப விசாரணை கருமங்களின் அறிக்கைகள் கிடைக்கப் பெறாமையால் கணக்காய்விற்கு பதிலளிக்க முடியாமல் உள்ளது. 2025 ஜூன் 02 திகதி அந்த ஆரம்ப விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டதென அறிவிக்கின்றேன்.	கணக்காய்வு ஐயவினாக்களுக்கு குறிப்பிட்ட காலப் பகுதியில் பதில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	அவதானிப்புக்கள் பெறுமதி ரூபா	இணங்காமைகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் பிரமாணம் 104(3)	20,456,009	2020 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையான காலப் பகுதியில் 585 தடம்புறள்தல்களும், 13 விலகுதல்களும் மற்றும் 62 மோதல்கள் உட்பட 660 சம்பவங்கள் அறிவிக்கப்பட்டதுடன், நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் 572 விபத்துக்கள் ஏற்பட்டு 01 வருடத்திற்கும் 04 வருடங்களுக்கும் இடையான காலம் கடந்திருந்த போதிலும், விசாரைண அலுவல்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 88 விபத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் ரூபா 20,456,009 தொகையாக காணப்பட்டது.	போக்குவரத்து உப திணைக்களத்தின் விசாரணை உத்தியோகத்தர்களுக்கான பாரிய வெற்றிடங்கள் காணப்படுவதனால் 2020 – 2024 இடைப்பட்ட தடம்புறள்தல்கள், விலகுதல்கள் மற்றும் மோதல்கள் சேதங்கள் தொடர்பான ஆரம்ப விசாரணை அலுவல்கள் அனேகமானவை தாமதம் அடைதல் ஏற்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை நிறைவேற்றப்பட்டிருக்காமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆண்டின் புகையிரத பிரயாண தடவைகள் நகர்களுக்கிடையான, அஞ்சல் மற்றும் கடுகதி, கலவை புகையிரதம், பயணிகள் புகையிரதம், பண்ட பேக்குவரத்து புகையிரதம் மற்றும் ரேல்பஸ் ஆக ஒட்டுமொத்த திட்டமிடப்பட்ட பிரயாண தடவைகள் 125,036 எண்ணிக்கையொன்று காணப்பட்டதுடன், அவற்றில் ஓட்டப்பட்ட பிரயாண தடவைகள் எண்ணிக்கை 119,731 தொகை காணப்பட்டது. அவற்றில் உரிய	பயணிகள் போக்குவரத்துக்கான புகையிரத எஞ்சின் சாரதிகள், கண்காணிப்பு முகாமையாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் சேர்க்கப்படாமை, தேய்வடைந்த மற்றும் விபத்துக்குள்ளாகிய புகையிரத எஞ்ஜின் பவர்செட் தொகுதிகள் என்பவற்றை திருத்த	புகையிரங்கள் தாமதமடைவதற்கு மற்றும் இரத்துச் செய்வதற்கு தாக்கத்தை ஏற்படுத்திய காரணங்களை இனங்கண்டு அவற்றிற்கு தீர்வு வழங்கி புகையிரதங்களை உரிய நேரத்தில் ஓடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	நேரத்தில் ஓட்டப்பட்ட பிரயாண தடவைகள் 61,038 தொகை மாத்திரம் காணப்பட்டது. ஓட்டப்பட்ட புகையிரத பிரயாண தடவைகளில் 49 சதவீதம் எனப்படும் 58,693 பிரயாணத் தடவைகள் தாமதமாக ஓட்டப்பட்டிருந்ததுடன், உரிய தாமதம் 10 நிமிடங்கள் முதல் 60 நிமிடங்கள் வரையான கால வீச்சில் காணப்பட்டது. அதேபோல், இந்த புகையிரதங்களில் இரத்துச் செய்யப்பட்ட புகையிரதங்களின் எண்ணிக்கை 5,305 தொகையாக காணப்பட்டதுடன், அவை ஒட்டுமொத்த திட்டமிடப்பட்ட புகையிரத எண்ணிக்கையில் 4.2 சதவீதமாக காணப்பட்டது.	வேலை மேற்கொள்வதில் தாமதமடைதல், புதிய பவர்செட் எஞ்ஜில்கள் பிரதான திருத்த வேலையொன்று மேற்கொள்ளப்படாமல் 12 வருடங்கள் இயங்குதல், சுமார் 15 வருடங்கள் பழமையான எஞ்ஜின் வண்டிகள் / புகையிரத பெட்டிகள் மற்றும் பவர்செட் தொகுதிகள் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமை, பொறியியலாளர்கள் ஆட்சேர்க்கப்படாமை மற்றும் இரத்மலானை தொழிற்சாலையின் நவீனமயப்படுத்தும் அலுவல்கள் தாமதமடைத்தல், பாதைகளின் திருத்த வேலைகளுக்காக தண்டவாளங்கள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாமை. வேக வரையறை விதிக்க நேரிடல், பாதை அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கான பிரயாண தடவைகள் வரையறுத்தல், காலநிலை நிலைமையால் புகையிரதங்கள் தாமதமடைதல் மற்றும் பிரயாண தடவைகளை இரத்துச் செய்வதற்காக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.	
(ஆ)	புகையிரத பாதை முறையை அண்டி பிரதான மற்றும் பிரதானமல்லாத 1362 குறுக்குப் பாதைகள் காணப்படுவதுடன், அவற்றில் 185 தனியார் குறுக்குப் பாதைகள் எனவும், 1177 புகையிரத திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய குறுக்குப் பாதை எனவும் காணப்படுவதுடன், இந்த 1177 புகையிரத குறுக்குப் பாதைகளில் 300 குறுக்குப் பாதைகளில் புகையிரத படலைகள் காணப்படுவதுடன், புகையிரதப்	புகையிரத பாதை முறையை அண்டி பிரதான மற்றும் பிரதானமல்லாத 1362 குறுக்குப் பாதைகள் காணப்படுகின்றன. இங்கு பாதுகாப்பற்றவை என குறிப்பிடப்பட்டுள்ள 439 குறுக்குப் பாதைகளில் அனேகமானவை விபத்து ஏற்படக்கூடிய மட்டத்தில் காணப்படும் குறுக்குப் பாதை என இனங்கண்டு பின்னர் தற்காலிக	பாதுகாப்பற்ற குறுக்குப் பாதைகளுக்காக விரைவாக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விபத்துக்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	குறுக்குப் பாதைகளில் சமிக்ஞை செயற்படுத்தப்படுகின்ற 438 உம், கையினால் இயக்கக்கூடிய 200 படலைகளும் உட்பட 439 குறுக்குப் பாதைகளில் பாதுகாப்பற்ற நிலைமை காணப்பட்ட போதிலும், அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த பாதுகாப்பற்ற புகையிரத குறுக்குப் பாதைகள் காணப்படுதல், குறுக்குப் பாதைகளுக்கு போடப்பட்டுள்ள பாதுகாப்பு செய்முறைகள் உரிய முறையில் செயற்படாமை காரணத்தினால் 2020 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையான 05 வருட காலப் பகுதியில் 385 குறுக்குப் பாதை விபத்துக்கள் ஏற்பட்டிருந்ததுடன், அவற்றின் மூலம் 37 ஆட்கள் இறந்திருத்தல் மற்றும் 105 ஆட்கள் காயமடைந்திருந்தனர் என அறிவிக்கப்பட்டிருந்தது.	அடிப்படையில் புகையிர நிலையங்களின் மூலம் அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டு வேக வரையறை மேற்கொள்ளல், ஒலி எழுப்பும் எச்சரிக்கை பலகைகள் உட்பட ஆபத்துக்களை அறிவிக்கும் பலகைகள் பொறுத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	
(இ)	காட்டு யானை விபத்துக்களை குறைத்துக்கொள்வதற்காக வன சீவராசிகள் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து 2018 ஒக்தோபர் 11 திகதி முதல் 15 திகதி வரை கணிப்பீடொன்று மேற்கொண்டு காட்டு யானைகள் புகையிரத்தில் மோதும் இடங்கள் மற்றும் காட்டு யானைகள் புகையிரதப் பாதைகள் நடமாடும் இடங்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொண்டிருந்த போதிலும், காட்டு யானை மோதல்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிவில்லை. அதன் காரணமாக புகையிரதத்தில் காட்டு யானைகள் மோதுவதனால் ஏற்படுகின்ற விபத்துக்கள் தற்போது மிகவும் கவலைக் கிடமான நிலைமையொன்று ஏற்பட்டிருந்ததுடன், 2020 முதல் 2024 ஆண்டு வரையான 05 ஆண்டு காலப் பகுதியில் புகையிரத்தில் மோதிய காரணத்தினால் 53 காட்டு யானைகள் இறந்துள்ளதுடன், 17 காட்டு யானைகள் காயமடைந்திருந்தாக அறிவிக்கப்பட்டிருந்தது.	காட்டு யானை மோதலை குறைப்பதற்காக புகையிரதத் திணைக்களத்தினால் புதிய புகையிரத வேக எல்லை விதிக்கப்பட்டு உள்ளக இரண்டு வார அறிவித்தல் ஒன்று 2025 மே 15 திகதி வெளியிடுதல் மற்றும் புகையிரத சாரதிகளுக்கு யானைக் கடவைகளை சிறந்த முறையில் தென்படக் கூடியவாறு பாதையின் இரு மருங்கையும் சுத்திகரிப்பு செய்தல், வனப் பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படும் செய்முறையொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	காட்டு யானை மோதல்களுக்கான காரணங்களை கண்டறிந்து அவற்றிற்கான தீர்வுகள் வழங்கப்பட்டு விபத்துக்களை தவிர்ந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ) **இணையத்தின் மூலம் புகையிரத ஆசனங்கள் ஒதுக்குதல்**

